# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1756/7 - 2012 මැයි 02 වැනි බදාදා - 2012.05.02

1756/7 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 18.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்க்ள் அதிகாரசபைச் சட்டம்**

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 20(5) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது உற்பத்தியாளர், இறக்குமதியாளர், பொதியிடுவோர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரிகள் எவரும் கீழே நிரல்படுத்தப்பட்ட வகுப்புப் பெயரைக் மற்றும் ஏதேனும் வியாபாரப் பெயரைக் கொண்டுள்ளதுமான 50 கிலோ சீமெந்துப் பொதிகளை ஆகக் கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக விற்பனை செய்யவோ விற்பனைக்கு விடவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென கட்டளையிடுகின்றது.

| வகுப்புப் பெயர் | | ஆகக் கூடிய சில்லறை விலை (50 கிலோ பொதியொன்று) |
|---|---|---|
| சாதாரண போட்லன்ட் சீமெந்து | SLS 107 | 855 ரூபா |
| போட்லன்ட் லைம்ஸ்ரோன் சீமெந்து | SLS 1253 | 855 ரூபா |
| மேசனறி சீமெந்து | SLS 515 | 805 ரூபா |

இக் கட்டளை 2012, மே 03 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது 2011, நவெம்பர் 05 ஆம் திகதிய 1730/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சீமெந்தின் ஆகக் கூடிய சில்லறை விலையை நிர்ணயித்த 17 ஆம் இலக்க கட்டளையை, இக்கட்டளையினால் இரத்து செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2012, மே 02.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.